**Starting time 12.41 P.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 171/2018**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 13.08.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வராஜ் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை : புல எண். 206/4 பி-ல் உள்ள நிலத்தில் புல எண்.206/4 சில் உள்ள கிணற்றில் 4 ல் 1 பங்கையும் வெங்கடாஜலம் பெற்ற கிரயத்தில் பெருமாள் தரப்பினர் அல்ல என்றால், சரியல்ல, பெருமாள் இருக்கிறார். எந்த வருடத்தில் அந்த சொத்து கிரயம் செய்யப்பட்டது என்றால், 1998. 2005 பி.வா.சா.ஆ-6 கிரயப்பத்திரத்தில் வெங்கடாஜலம் அவருடைய வேறு நிலங்களுக்கு தண்ணீர் எடுத்துச் செல்ல உரிமை எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால், சரியல்ல, கொடுத்துள்ளார்கள்.

2. வெங்கடாஜலமும், பெருமாளும் பொது குடும்ப நிதியிலிருந்து பெறப்பட்ட சொத்துக்களையும் உயில் மூலம் வந்த சொத்துக்களையும் அனுசரித்துக் கொண்டார்கள் என்ற விவரம் வெங்கடாஜலம் சொல்லிதான் தெரியும் என்றால், தடப்பிரச்சனைக்காக சென்றபோது பத்திரத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். வெங்கடாஜலம், பெருமாள் சகோதரர் என்ற முறையில் பொது நிலங்களையும், கிணற்றையும் சமமாக பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

3. கிணற்று மின் இணைப்பையும், கிணற்றையும் சமமாக அனுபவித்து வந்தார்கள் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. 03.06.2005 தேதியிட்ட தடபாக பாத்திய ஒப்பந்த

பத்திரத்திலும் பெருமாள் தரப்பினர் அல்ல என்றால், சரியல்ல. புல எண். 206/4 சில் உள்ள கிணற்றில் இருந்து பெருமாள் தனக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட Change over switch வைத்துக் கொள்வது தொடர்பாக 18.09.2017-ல் ஒப்பந்த பத்திரம் எழுதிக் கொண்டார்கள் என்றால், ஆமாம். அதன்படி நடந்து கொள்ள இயலாததால் தான் அடுத்த பைசலுக்கு சென்றார்கள் என்றால், ஆமாம்.

4. என்னுடைய சாட்சியத்தில் 03.03.2020 தேதியிட்ட பத்திரம் குறித்து சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், ஆமாம். வாதியே அந்த பத்திரத்தை முன்னிலைப்படுத்தாத நிலையில் அது குறித்து என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல, தரப்பினர்களுக்குள் எவ்வளவு ஆண்டுகாலமாக வழக்கு நடந்து வருகிறது என்றால், 2017 முதல். ஒருதலைபட்சமாக நான் வெங்கடாஜலத்திற்கு ஆதரவாக நடந்ததால் பெருமாள் நான் சொன்னதை ஏற்றுக் கொள்ளாததால் அவருக்கு எதிராக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.53 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.